நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்

முன்னிலை: திரு. சீ. ராஜ குமாரன் **B.E. L.L.B.,**

நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.

**2026-**ம் ஆண்டு ஜீன் மாதம் **22-**ம் நாள் திங்கள்கிழமை

குற்றவியல் பல்வகை மனு எண்**: 65/2026**

அம்மணி (63),
க/பெ. மலையன் ..... மனுதாரர்/நகை உரிமையாளர்

/ எதிர் /

அரசுக்காக - காவல் உதவி ஆய்வாளர்,
வாழவந்திநாடு காவல் நிலையம்,
குற்ற எண்: 22/2026,
சட்டப்பிரிவு-305, 331(3) of BNS, ..... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. அர்ஜூனன் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் வழங்கும்......

<u>உத்தரவு</u>

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 4 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள தங்கக்கட்டி ஒன்று மற்றும் 3 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள தங்கக்கட்டி ஒன்று மற்றும் ரூ. 500 ரூபாய் தாள்களை கொண்ட 200 எண்ணிக்கை கொண்ட ரூ. 1,00,000/- பணம் ஆகிய வழக்கு சொத்துகளை மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரி BNSS பிரிவு 497 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாழவந்திநாடு காவல் நிலைய குற்ற எண்: 22/2026, சட்டப்பிரிவு 305, 331(3) of BNS என்ற வழக்கில் கடந்த 04.04.2026ம் தேதியில் மனுதாரருக்கு சொந்தமான கழுத்து செயின் -4 பவுன், பட்டை செயின் -3 பவுன், செயின் -2 பவுன் ஆக மொத்தம் -9 பவுன் மற்றும் கைரொக்கம் ரூபாய் 1,00,000/- த்தை திருடிச்சென்றதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அப்புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு

மனுதாரருக்கு சொந்தமான மேற்படி 4 பவுன்களை உருக்கிய நிலையில் ஒரு கட்டியாகவும், 3 பவுன்களை உருக்கிய நிலையில் ஒரு கட்டியாகவும் மற்றும் 500 ரூபாய் தாள்களை கொண்டு 200 எண்ணிக்கை கொண்டு ரூ. 1,00,000/- த்தை மேற்படி போலீசாரால் சம்பந்தப்பட்ட எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும், தற்போது வழக்குச் சொத்து மனதாரருடைய அத்தியாவசிய தேவைக்காக அவரசமாக தேவைப்படுவதால், வழக்கு சொத்துகளை மனுதாரர் வசம்த ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை அடகு வைக்கவோ விற்பனை செய்யவோ செய்யமாட்டேன் என்றும், மேற்படி நகைகளை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சத்தில், கனம் நீதிமன்றம் திரும்ப கேட்கும் போது தான் மேற்படி நகைகளை ஒப்படைக்க தயாராக இருப்பதாலும், மேற்படி வழக்கு சொத்தினை மனுதாரரிடம் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி, மனுதாரர் தரப்பில் BNSS பிரிவு 497 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அவர்கள் கொடுத்த பதில் மனுவில், மேற்படி 4 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள ஒரு தங்க கட்டி ஒன்று மற்றும் 3 பவுன் உருக்கிய நிலையில் உள்ள தங்க கட்டி ஒன்று மற்றும் 500 ரூபாய் தாள்களை கொண்ட 200 எண்ணிக்கை கொண்ட கைரொக்கம் ரூ. 1,00,000/- த்தை மனுதாரர் பொறுப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில் மனுதாரர் அதனை அழிக்கவோ அல்லது சேதப்படுத்துவோ கூடும் என்றும், அரசுதரப்பில் ஆவணமாகக் குறிக்கப்பட வேண்டிய மிக அவசியமான பொருள் என்றும், மேற்படி 4 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள ஒரு தங்க கட்டி ஒன்று மற்றும் 3 பவுன் உருக்கிய நிலையில் உள்ள தங்க கட்டி ஒன்று மற்றும் 500 ரூபாய் தாள்களை கொண்ட 200 எண்ணிக்கை கொண்ட கைரொக்கம் ரூ. 1,00,000/- த்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் வழக்கு சொத்துகளை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததா என்பதே ஆகும்.

6. இம்மனுவில் மனுதாரர் தான் கடந்த 04.04.2026ம் தேதியில் தனக்கு சொந்தமான கழுத்து செயின் -4 பவுன், பட்டை செயின் -3 பவுன், செயின் -2 பவுன் ஆக

மொத்தம் -9 பவுன் மற்றும் கைரொக்கம் ரூபாய் 1,00,000/- ஆகியவை திருடு போனது சம்பந்தமாக புகார் கொடுத்திருந்ததாகவும், மேற்படி புகாரின் பேரில் இவ்வழக்கில் 4 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள தங்கக்கட்டி ஒன்று மற்றும் 3 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள தங்கக்கட்டி ஒன்று மற்றும் ரூ. 500 ரூபாய் தாள்களை கொண்ட 200 எண்ணிக்கை கொண்ட ரூ. 1,00,000/- பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகவும் கூறியுள்ள நிலையில் மேற்படி வழக்கு சொத்துகளை கைப்பற்றப்பட்டது குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

7. மேலும் இவ்வழக்கில் மனுதாரர் தனது மனுவில் வழக்கு சொத்துகளானது மனுதாரின் அத்தியாவசிய தேவைக்காக அவசரமாக தேவைப்படுவதாக கூறியுள்ளார். வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் Sundar bai ambalal desai Vs State of Gujarat என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை கருத்தில் கொண்டும், மேற்படி நகை மற்றும் பணத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும் போது கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளானது நாளது வரை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், குற்றவியல் பல்வகை மனு எண். 64/2026 ன் கீழ் மேற்படி வழக்கு சொத்துகளை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நகை மற்றும் பணத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்திரவிடுகிறது.

1. இவ்வழக்கின் வழக்கு சொத்துகள் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதற்கு பின்பு மனுதாரர் மேற்படி 4 பவுன் கொண்ட உருக்கிய நிலையில் உள்ள ஒரு தங்க கட்டி ஒன்று மற்றும் 3 பவுன் உருக்கிய நிலையில் உள்ள தங்க கட்டி ஒன்று மற்றும் 500 ரூபாய் தாள்களை கொண்ட 200 எண்ணிக்கை கொண்ட கைரொக்கம் ரூ. 1,00,000/- த்தை, படி நான்கு (4) கோணங்களில் கலர் புகைப்படம் எடுத்து புகைப்படங்களை பிரிவு 63(4)(c)

பாரதிய சாட்சிய அதிநியத்தின் கீழ் சான்றிதழுடன் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும்,

2. மனுதாரரே ஒரு பிணையாகவும், மேலும் ஒரு ஜாமீன்தாரரை முன் நிறுத்தி தலா ரூ.8,00,000/- க்கு சொந்த பிணைமுறி எழுதித் தரவேண்டும்.
3. மனுதாரர் வழக்கு சொத்தினை உரிமை மாற்றமோ உருமாற்றமோ வழக்கு முடியும் வரை செய்யகூடாது.
4. இந்நீதிமன்றத்தின் உத்திரவின் போது வழக்கு சொத்தை வழக்கு விசாரணையின் போது ஆஜர் செய்ய வேண்டும்.
5. மேற்படி மனுதாரர் பஞ்சநாமா (Form no. 82)-வில் கையெழுத்து செய்ய வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026-**ம் ஆண்டு ஜீன் மாதம் **22-**ம் நாள் திங்கள்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

OS 24/2024 - Exp.A4 by PW1 - Dt.27.06.2025

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.22 18:52:00 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.